# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## GGY 3.21 – COASTAL GEOMORPHOLOGY & ENVIRONMENTAL PERSPECTIVE

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) கரையோர தின்னலை ஊக்கப்படுத்தும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கை தென்கிழக்கு பிரதேச ஒலுவில் துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளால் கரையோரத்தில் ஏற்படக் கூடிய சாதக பாதக விளைவுகளை பரிசீலிக்குக.

(10 புள்ளிகள்)

02. அ) கடற்கரையொன்றின் பிரதான பிரிவுகளைக் காட்டுவதற்கு குறுக்கு வெட்டுமுகம் ஒன்று வரைந்து சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) அலைகளின் தொழிற்பாட்டினால் உருவாகின்ற இரு தின்னல் படிதல் நிலவுருவங்களை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

இ) கடற்கரை தின்னலுக்கு ஏதுவாக அமையும் நான்கு மானிட நடவடிக்கைகளை சுருக்கமாக ஆராய்க.

(05 புள்ளிகள்)

03. அ) இலங்கையில் கடல்வலயச் சட்டம் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் கடல் வலயத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

04. அ) கடல்சார் ஈரநிலங்கள் என்றால் என்ன? என்பதை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் கடல்சார் ஈரநிலங்களின் உயிர்பல்வகைமை அருகி வருவதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை நுணுக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

05. அ) கரையோர சூழல் மாசடைதலின் பிரதான மூலகங்களை அடையாளப்படுத்தி அதனை முகாமை செய்வதற்கான ஏற்பாடுகளை வலியுறுத்துக.

(10 புள்ளிகள்)

ஆ) கரையோர வாழிடங்களை வகைப்படுத்தி அவைகளின் பயன்பாட்டு, முக்கியத்துவத்தினை பட்டியற்படுத்துக.

(10 புள்ளிகள்)

06. அ) சேதுசமுத்திர திட்டமென்றால் என்ன என்பதனை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) சேதுசமுத்திர திட்டத்தினால் இலங்கை அடையப்போகும் சாதக பாதக நிலமைகளை பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

07. அ) சாதாரண கடலலையையும் சுனாமி பேரலையின் தோற்றமும் வளர்ச்சியையும் வேறுபடுத்தி ஆராய்க.

(10 புள்ளிகள்)

ஆ) "2004 ஆம் ஆண்டு சுனாமியானது பல பாரிய இழப்புக்களை தோற்றுவித்தாலும் பல அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கும் அடித்தளத்தினையும் இட்டுள்ளது". மேலே உள்ள கூற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

08. அ) கடற்கரையோர வளங்களின் வகையினையும் விரிவாக்கத்தினையும் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) கரையோர வளங்களின் வகைகள், பாவனை வளநுகர்வு போன்றவற்றினை பொருத்தமான உதாரணங்களைக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

*****